## முக்கிய தினங்கள்

1. அக்டோபர் 31 ஆம் தேதி முதல் ஒரு வாரத்திற்கான காலத்தை லஞ்ச ஒழிப்பு வாரமாக அனுசரிக்கப்படுகிறது

உலக ஊடகம் மற்றும் தகவல் அறிவு வாரம் அக்டோபர் 31 முதல் நவம்பர் 5 வரை அனுசரிக்கப்பட்டது (Global media and information literacy week 2016)

2. போர் மற்றும் ஆயுத சண்டைகளின் மூலம் சுற்றுசூழல் சுரண்டப்படுதலை தடுப்பதற்கான சர்வதேசதினம் நவம்பர் 6.
3. சர்வதேச பத்திரிக்கையாளர்களுக்கெதிரான குற்றங்களை முடிவு செய்தலுக்கான தினம் – நவம்பர் 2.
4. உலகின் முதல் சுனாமி விழிப்புணர்வு தினம் – நவம்பர் 5
5. தேசிய கேன்சர் நோய் விழிப்புணர்வு தினம் – நவம்பர் 7
6. உலக நிமோனியா தினம் – நவம்பர் 12.
7. பொது சேவைக்கான ஒலிபரப்பு தினம் – நவம்பர் 12
8. உலக அமைதி (ம) வளர்ச்சிக்கான அறிவியல் தினம் – நவம்பர் 10
9. உலக நீரிழிவு தினம் – நவம்பர் 14
10. ஐ. நா அமைப்பின் சர்வதேச சகிப்புததன்மை தினம் – நவம்பர் 16
11. உலக தத்துவ தினம் – நவம்பர் 17
12. உலக சாலை போக்குவரத்து நெரிசலினால் மரணமடைந்தோர் நினைவு தினம் – நவம்பர் 20.
13. உலக கழிப்பறை தினம் – நவம்பர் 19
14. உலக பாரம்பரிய தினம் – நவம்பர் 19
15. உலக தொலைக்காட்சி தினம் – நவம்பர் 21
16. தேசிய பத்திரிக்கை தினம் – நவம்பர் 16
17. உலக மீனவர் தினம் – நவம்பர் 21
18. சர்வதேச பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழித்தல் தினம் – நவம்பர் 25
19. தேசிய பால் தினம் – நவம்பர் 26

## தேசிய செய்திகள்

1. **திறந்த வெளியில் மலம் கழிக்கும் அவலம் இல்லாத மாநிலங்களின்** பட்டியலில் மூன்றாவது மாநிலமாக **கேரளா** இணைந்துள்ளது.
2. **கலம்காரி ஓவியத்தை** நவீனப்படுத்திய **எம்பெருமாள்** காலமானார்.
3. ரியோ பரா ஒலிம்பிக் **குண்டு எறிதல்** வீராங்கனை **தீபா மாலிக்குக்கு** ரூ. 4 கோடி பரிசு பிரதமர் மோடி வழங்கினார்.

4. **நிதி அயோக்** விவசாயத்திற்கு உகந்த மாநிலங்கள் பட்டியலில் **மகாராஷ்டிரா மாநிலம்** முதலிடம் பிடித்துள்ளது.
5. பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு இலவச சட்ட உதவி வழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்துள்ள மாநிலம் – **ஒடிசா.**
6. சமீபத்தில் இந்தியாவிடமிருந்து ஆக்கிரமித்த பகுதியில் அணை கட்டுவதற்கு பாகிஸ்தானுக்கு கடனுதவி மறுத்துள்ள **ஆசிய வளர்ச்சி வங்கியின் தலைமையிடம் – மணிலா.**
7. இஸ்லாமிய கூட்டமைப்பின் பொதுச் செயலர் பதவியிலிருந்து சமீபத்தில் ராஜினாமா செய்தவர் – **ஐயாத் மதானி**
8. புகழ்பெற்ற தொலைக்காட்டி ஊடகவியலாளர் **அர்ணாப் கோஸ்வாமி டைம்ஸ் நவ்** தன்னுடைய முதன்மை செய்தி ஆசிரியர் பதவியை ராஜினாமா செய்தார்
9. டிவிட்டர் நிறுவனத்தின் இந்திய தலைவர் **ரிஷி ஜெட்லி** தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.
10. நவம்பர் 2016 தனது மாநிலத்திலுள்ள 14 மாவட்டங்களையும் **வறட்சி பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக** அறிவித்த மாநிலம் – **கேரளா**
11. இந்திய மாணவர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பை வழங்குவதாற்காக மத்திய மனித வளத்துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ள சமூகவலை நிறுவனம் – **லிங்கட் இன்**
12. **யுமாங் அலைபேசி செயலி** UMANG (Unified Mobile App for New-age Governance) – அனைத்து அரசு துறை சேவைகளையும் ஒருங்கிணைக்கும் அலைபேசி செயலி மார்ச் 2017–ல் அறிமுகப்படுத்தப்பட உள்ளது
13. அனைவருக்கும் வீடு என்ற இலக்கில் **பரிப்பிதா மிஷன்** எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள மாநிலம் – **கேரளா**
14. **நவம்பர் 1 ஐ புகையிலை ஒழிப்பு தினமாக** அனுசரிக்கும் மாநிலம் – **பஞ்சாப்**
15. அகில இந்தியா டென்னிஸ் சங்க தலைவர் **அனில்கன்னா** தனது பதவியை ராஜினாம செய்வதாக அறிவித்துள்ளார்.
16. மத்திய அரசின் முன்னாள் கல்வியமைச்சர் சுதந்திர போராட்ட வீரருமான, மவுலானா **அபுல்கலாம் ஆசாத்தின் பிறந்த நாளான நவம்பர் 11 தேசிய கல்வி நாளாக** கொண்டாப்பட்டுகிறது
17. பீஹாரில் சூரியனை வழிபடும் திருவிழா– **சாத்திருவிழா**
18. ஆசியாவிலேயே மிகப்பெரிய மனிதனால் நடத்தப்படும் காட்டு சுற்றுலா இருக்கும் இடம் **நயா ரெய்ப்பூர், சட்டிஸ்கர் மாநிலம்.**
19. **சர்வதேச புகையிலைக் கட்டுப்பாட்டிற்**கான **ஏழாவது மாநாடு** உத்தரபிதேசம் **கிரேட்டா நொய்டாவில்** நடைபெற உள்ளது
20. **பிதர்கணிகா தேசிய பூங்கா** அமைந்துள்ள மாநிலம் – **ஒடிசா**

21. **தனுபாய் காந்தி –** காந்தியடிகளின் முன்றாவது மகன் ராம்தாஸ் காந்தியின் மகன் ஒரு முன்னாள் அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் விஞ்ஞானி இவர் சமீபத்தில் மரணமடைந்தார்.
22. **Protect 2016 எனப்படும் சர்வதேச எண்ணெய் மற்றும் எரிவாயு கண்காட்சி கூடுகை** புதுடில்லியில் நடைபெற்றது
23. மறைந்த பழங்கால இந்தியா ஆறு **சந்திரபாகா ஆறு,** ஒடிசா மாநிலம் கோனார்க்கில் உள்ள சூரிய கோயிலின் அருகே கண்டுபிடிக்கப்பட்டது.
24. இந்தியாவின் முதல் இயற்கை திரவ எரிவாயுவினால் **(LPG)** இயங்கும் **பேருந்து கேரள** மாநிலத்தில் இயக்கப்பட்டுள்ளது
25. **குஜராத் மாநில அரசு தீனதயாள் மருந்து கடைகள்** எனும் பெயரில் ஏழை மக்களுக்கு 40 முதல் 80% குறைவான விலையில் மருந்துகளை விற்பதற்கான திட்டம் அறிமுகம் செய்துள்ளது
26. **Healthy India Institute** எனப்படும் காலாண்டு பருவ இதழை மத்திய சுகாதார அமைச்சர் **ஜகத் பிரகாஷ் நட்டா** புது தில்லியில் துவக்கி வைத்தார் மேலும் **No more tension** எனப்டும் மொபைல் அப்ளிகேஷனும் வெளியிடப்பட்டுள்ளது.
27. **கார்ப்பரேசன் வங்கியின் தலைமையிடம் – மங்களுரு**
28. **தி கதாகார் –** எனப்படும் சர்வதேச கதை சொல்லும் திருவிழா நடைபெறும் இந்திய நகரம் – **புதுடில்லி**
29. 2016–ல் ஆண்டிற்கான பிரிக்ஸ் அமைப்பின் தகவல் தொடர்பு அமைச்சர்களின் கூடுகை பெங்களுர் நகரில் நடைபெற்றது.
30. **உலகின் மிக உயர ஸ்கை வாக்** அமைய உள்ள இந்தியமாநிலம் – **பாலெஸ்துங்கா ஸ்கை வாக், சிக்கிம்**
31. இந்தியாவின் முதல் வங்கிபணியில் பயன்படுத்தப்படும் ரோபோ லக்ஸ்மியை அறிமுகப்படுத்தியுள்ள வங்கி **சிட்டி யூனியன் பாங்க்**
32. ஆசிய வளர்ச்சி வங்கியிலிருந்து 500 மில்லியன் டாலர் கடன் தொகையில் கங்கை நதியில் குறுக்கே கட்டப்படும் இந்தியாவின் மிகவும் நீளமான ஆற்றின் குறுக்கே உள்ள பாலம் அமைய உள்ள மாநிலம் – பீகார்
33. **பறக்கும் சாம்பல்** பயன்பாட்டு கொள்கையை அமல்படுத்திய முதல் மாநிலம் – **மகாராஷ்டிரா**
34. உலகின் அதிவேகத் திறனுள்ள சூப்பர் கம்ப்யூட்டர் பட்டியலில் தொடர்ந்து எட்டாவது முறையாக **சன்வே தாய் ஹீலைட்** என்ற சீனாவில் கணினி முதலிடம் பிடித்துள்ளது.
35. ஆதார் அமைப்பினால் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள இலவச தொலைப்பேசி உதவி எண்.1947
36. ஆக்ஸ்போர்டு டிக்ஷனரியினால் 2016 ஆம் ஆண்டிற்கான வார்த்தையாக அறிவிக்கப்பட்ட ஆங்கில வார்த்தை – **Post truth**

37. பிரதமர் அவர்கள் அறிவித்த 500, 1000 ரூபாய் நோட்டுகளை திரும்ப பெறும் திட்டத்தை வரவேற்று முதலில் தீர்மானம் இயற்றிய மாநிலம் – **சட்டிஸ்கர்**
38. சமீபத்தில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள **வராக்கடன் பட்டியலில்** முதலில் உள்ள நிறுவனம் – **கிங்பிஷர் ஏர்லைன்ஸ்**
39. இந்தியாவின் முதல் **செர்ரி மலர் விழா** நடைபெறும் மாநிலம் – **ஷில்லாங்கிலுள்ள வார்ட் ஏரி, மேகாலயா**
40. நவம்பர் 2016–ல் மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் **டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்கான** ஒப்பந்தம் மேற்கொண்டுள்ள இந்திய மாநிலம் – **தெலுங்கானா**
41. மாபெரும் இந்தியர் திரைப்பட மற்றும் இலக்கிய திருவிழா 2016 நடைபெறும் இடம் – **குருகிராம், ஹரியானா**
42. **தேசிய சோவா ரிக்பா கல்வி நிறுவனம்** அமையவுள்ள இடம் – **லேக். ஜம்முகஷ்மீர்**
43. "சோவா ரிக்பா" – **திபெத்திய பாரம்பரிய மருத்துவமுறை**
44. மத்திய மருந்துகள் தர அமைப்பின் தலைமையிடம் அமைந்துள்ள இடம் – **புதுடில்லி**
45. முதல் முறையாக நக்ஸல்களுக்கெதிரான ஆபரேசனில் மத்திய ரிசர்வ் பாதுகாப்பு படையின் **பெண்கமாண்டோக்கள் குழு** பயன்படுத்தும் மாநிலம் – **ஜார்க்கண்ட்**
46. German watch and climate Action Network Europe எனும் அமைப்பு வெளியிட்டுள்ள **காலநிலை மாற்றத்திற்கெதிரான** முயற்சிகளில் ஈடுபடும் நாடுகளின் பட்டியலில் **இந்தியா 20–வது இடம்** பெற்றுள்ளது.
47. **சச்சின் டெண்டுல்கர்** ஆந்திர மாநிலத்தின் நெல்லூர் மாவட்டத்திலுள்ள **புட்டம் ராஜீவரி கண்ட்ரிகா என்ற கிராமத்தை 2 – வது கிராமமாக தத்தெடுத்துள்ளார்**
48. நாட்டில் அதிகளவு மார்பக புற்றுநோயால் தாக்கப்பட்ட நோயாளிகளைக் கொண்டதால் இந்தியாவின் **மார்பக புற்றுநோய் தலைநகரம்** எனப்படும் நகரம் **திருவனந்தபுரம், கேரளா**
49. **சர்வதேச சூரிய மின்சக்தி கூட்டமைப்பின் தலைமையிடம் உள்ள இடம் – குருகிராம் இந்தியா**
50. **இரவில் பயணிக்கும் வாகனங்களில்** தானாக **விளக்கை சரிசெய்து கொள்ளும்** வசதியை அனைத்து நான்கு சக்கர வாகனங்களுக்கும் கட்டாயமாக்கியுள்ள மாநிலம் – **ஹரியாணா**
51. உலகின் முதல் **பாலிவுட் சினிமா பூங்கா** அமைக்கப்பட்டுள்ள இடம் – **துபாய்**
52. **இந்தியாவின் மிக நீளமான ஆக்ரா–லக்னோ அதிவேக நெடுஞ்சாலை** (எக்ஸ்பிரஸ்வே) உத்திரபிரதேச முதலமைச்சரால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது
53. இந்தியாவின் **முதல் மின்னணு – சட்டமன்ற தொகுதியாக** ஹிமாச்சல் பிரதேச மாநிலத்தின் காங்ரா மாவட்டத்திலுள்ள **பாலம்பூர்** சட்டமன்ற தொகுதி உருவாகியுள்ளது
54. 14–வது வெளிநாடு வாழ் இந்தியர் தினத்தில் சிறப்பு விருந்தினராக போர்ச்சுகல் நாட்டின் பிராமர் **ஆண்டாணியோ கோஸ்டா** பங்கேற்க உள்ளார்.

55. ஷாங்காய் கூட்டமைப்பின் ஆற்றல் அமைப்பு மாநாடு, 2017–க்கு தலைமையேற்கும் நாடு – துருக்கி

56. ஜனவரி 2017–ல் இந்தியாவின் முதல் சர்வதேச குழந்தைகள் திரைப்பட நடைபெறவிருக்கும் நகரம் – மும்பை

57. இந்தியாவின் முதல் **பணமில்லா மாநிலமாக கோவா** மாற உள்ளது

58. **வாங்காலா** – மேகாலயாவிலுள்ள **காரோ மலைவாழ்** இனத்தின் அறுவடை காலத்தின் முடிவை அனுசரிக்கும் வண்ணம் விழாவாகக் கொண்டாடப்படுகிறது

59. உலக தகவல் தொடர்பு தொழில்நுட்பப் பட்டியல் 2016–ல் இந்தியா 138–வது இடம் பெற்றுள்ளது

60. **QS Employability Ranking** எனும் அமைப்பு வெளியிட்டுள்ள **மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை உறுதி செய்யும் பல்கலைக் கழகங்களின்** பட்டியலில் **ஐஐடி காரக்பூர்** முதலிடம் பெற்றுள்ளது

61. உலகிலேயே அதிகளவு **அரிசி ஏற்றுமதி** செய்யும் நாடு – **இந்தியா**

62. **ஜீடிமா திருவிழா** – விளையாட்டு மற்றும் கலாச்சாரத் திருவிழா நடைபெறும் மாநிலம் – அஸ்ஸாம்

63. இந்தியாவின் முதல் பணமற்ற டிஜிட்டல் பணப் பரிமாற்ற கிராமமாக **குஜராத்திலுள்ள சபர்காந்தா** மாவட்டத்திலுள்ள **ஆகோதார கிராமம்** உருவாகியுள்ளது.

64. **Nuclear field communication** தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி **டெபிட் கார்டு** அறிமுகப்படுத்திய முதல் வங்கி – **South Indian Bank.**

65. ஏர்டெல் நிறுவனத்தினால்இந்தியாவில் **முதல் பேமண்ட் வங்கி** துவங்கப்பட்ட இடம் – **ராஜஸ்தான்**

66. மகாராஷ்டிர மாநிலத்தில் அரசின் பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் பயன்பெறுவோருக்கு பொருளுதவிக்குப் பதிலாக அவர்களின் வங்கிக் கணக்கில் ரொக்கமாகச் செலுத்த அம்மாநிலம் முடிவு செய்துள்ளது.

67. ஆசியாவிலேயே **மிக அதிக நீளமுடைய மிதிவண்டி நெடுஞ்சாலை உத்திரபிரதேசத்தில் (இதாவா முதல் ஆக்ரா வரை)** துவங்கப்பட்டுள்ளது .

65. "Indian Police at your call" மொபைல் ஆப் – ஹைதராபாத் நகரில் பிரதமர் அறிமுகப்படுத்தினார்.

66. ரிசர்வ் வங்கி புதிய ருபாய் 1 கரன்சி நோட்டுகளை புழக்கத்தில் விட உள்ளது. H சின்னத்துடன் உள்ள புதிய நோட்டில் பச்சை மற்றும் ரோஜா நிறம் கலந்து இருக்கும்.

## சர்வேதச செய்திகள்

1. **லெபனான்** அதிபராக முன்னாள் இராணுவ தளபதி **மைக்கேல் ஆவன்** அன்னாட்டு நாடாளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். லெபனானின் **தலைநகரம் பெய்ருட் மற்றும் நாணயம் லெபனான் பவுண்ட்**

2. 2018–ம் ஆண்டிற்கான பேரிடர் பேரழிவு குறைப்பிற்கான ஆசிய அமைச்சர்களின் கூடுகை மங்கோலியாவில் நடைபெற உள்ளது. (Asian ministerial conference on Disaster risk Reduction)
3. **உலக பருவ நிலை மாநாடு மொரோக்கோவின் மாராகேக் நகரில்** நடைபெற்றது
4. கிராண்ட் தோரண்டன் சர்வதேச தொழில் அறிக்கை 2016–ன் படி தொழில் புரிவதற்கான நம்பிக்கை நாடுகளின் பட்டியலில் இந்தியா 2–வது இடம்.
5. உலகின் முதல் **ஹைட்ரஜனால் இயங்கும் (ம) பூஞ்சிய கதிர் வீச்சுடைய** பயணிகள் **ரயில் ஜெர்மனியில்** துவக்கிவைக்கப்பட்டது.
6. **ஆசிய – பசுபிக் பொருளாதார கூட்டமைப்பின்** 2016–ம் ஆண்டிற்கான **கூடுகை** நடைபெறும் நாடு – **பெரு.**
7. உலகின் மிகப் பிரபலமான பழம்பெரும் கனடிய பாடகர் (ம) கவிஞர், பாடலாசிரியர். ஓவியர் என பன்முகத்தன்மை கொண்ட **லியோனார்ட் கோயான் காலமானார்**
8. சர்வதேச போட்டி கமிஷனின் 2017 ஆம் ஆண்டிற்கான கூடுகை நடைபெறவிருக்கும் நாடு – போர்ச்சுகல். இந்த அமைப்பின் 2018 ஆம் ஆண்டிற்கான கூடுகை புதுடில்லியில் நடைபெற உள்ளது
9. **பல்கேரியா** நாட்டின் அதிபர் – **ருமென் ராடெவ்**
10. சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவாவலில் 2018 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள உலக சுகாதார அமைப்பின் புகையிலைக் கட்டுப்பாட்டு மாநாட்டை தலைமையேற்று நடத்த உள்ள நாடு **இந்தியா**
11. **கியூபா** நாட்டின் **ரும்பா நடனம்** – யுனெஸ்கோவின் அரிய கலாச்சார பாரம்பரிய கலைகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது
12. இந்தியாவிற்கு கச்சா எண்ணை வழங்கும் நாடுகளில் சவுதி அரேபியாவை பின்னுக்குத் தள்ளி முதலிடம் பெற்ற நாடு – **ஈரான்**
13. சமீபத்தில் ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து 1000 மில்லியன் அமெரிக்க டாலர் கடனுதவி பெற்றுள்ள இந்திய பொதுத்துறை நிறுவனம் – **Power Grid corporation (India) Ltd.**
14. **ரீட் உல் பார்க்** இராணுவப் பயிற்சியுடன் தொடர்புடைய நாடு – **பாகிஸ்தான்**
15. **உலக பயண சந்தை 2016** நடைபெற்ற இடம் – **லண்டன்** (World travel market)
16. **தி ஹேக்** நகரைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள **சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து** நவம்பர் 2016–ல் **விலகுவதாக** அறிவித்துள்ள நாடு – **ரஷ்யா**
17. உலகின் மிகவும் நீளமான அதி நவீன பாதுகாப்பான **குவாண்டம் தகவல் தொடர்பு** இணைப்பை துவங்கியுள்ள நாடு – **சீனா**
18. ஹாலிவுட் நடிகர் **ஸ்டீவன் சீகலுக்கு ரஷ்யா குடியுரிமை** வழங்கப்பட்டது

19. உலகிலேயே முதல் நாடாக பணப் புழக்கமே இல்லாமல் டிஜிட்டல் முறையிலேயே அனைத்து பணப் பரிவர்த்தனைகளையும் செய்யும் வகையில் டிஜிட்டல் கரண்சியை வெளியிட்டு, ஸ்வீடன் சாதனை படைக்க உள்ளது.

20. 24–வது ஆசிய – பசிபிக் பொருளாதார கூட்டமைப்பின் (APEC) கூடுகை **பெரு நாட்டின் லிமா** நகரில் நடைபெற்றது.

21. எகிப்தில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக 1200 கோடி அமெரிக்க டாலர்கள் கடனுதவி வழங்க சர்வதேச நாணய நிதியத்தின் செயற்குழு ஒப்புதல் அளித்துள்ளது

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

1. **சீனா** உருவாக்கிய **லாங் மார்ச் – 5** எனப்படும் அதிக சக்தி வாய்ந்த ராக்கெட் சோதனை **வெற்றிப் பெற்றது** .

2. அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசாவின், உலகிலேயே மிகப் பெரிய விண்வெளி தொலைநோக்கியான **ஜேம்ஸ் வெப்விண்வெளி** தொலைநோக்கியானது 2018 முதல் செயல்படத் தொடங்கும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

3. 2017 **மார்ச்சில் சார்க் செயற்கைகோள்** ஏவப்படும் என இஸ்ரோ தலைவர் ஏ. எஸ் கிரண்குமார் தெரிவித்தார் .

4. நாசாவின் Magnetospheric Multiscale Missions (MMS) எனும் விண்வெளி ஆராய்ச்சி திட்டத்தில் மிக அதிக உயரத்திற்கு GPS சமிக்ஞை (Signal) க்காக கின்னஸ் உலக சாதனை அறிவிக்கப்பட்டுள்ளது.

5. **XPNAV-1** என்ற செயற்கைக்கோளை அனுப்பிய நாடு– **சீனா**

6. **Seafly – 01** எனப்படும் மனிதனற்ற போர்க்கப்பலை உருவாக்கியுள்ள நாடு **– சீனா**

7. **Tianlian** எனப்படும் **தகவல் தரவுகளுக்கான** பிரத்யேக செயற்கைக்கோளை விண்ணுக்கு அனுப்பியுள்ள நாடு **– சீனா**

8. ஐரோப்பிய, ரஷ்ய (ம) அமெரிக்க விண்வெளி வீரர்களுடன் சமீபத்தில் சர்வதேச விண்வெளி மையத்திற்கு சென்றடைந்த ரஷ்யாவின் விண்கலத்தின் பெயர் **– சோயஸ்**

9. **ஜாகுவார் தரின் III –** இரு இருக்கைகள் கொண்ட **போர் விமானம்** இந்திய விமானப்படையில் இணைக்கப்பட்டது.

## திட்டங்கள் (ம) குழுக்கள் ஒப்பந்தங்கள்

**1. சமுத்ரயான் திட்டம்**

ஆழ்கடலுக்குள் நவீன வாகனம் மூலம் விஞ்ஞானிகள் ஆராய்ச்சியாளர்களை அனுப்பி ஆராய்ச்சி மேற்கொள்ளும் திட்டம்.

2. **சூரிய கிரண்** – 10–வது இந்தியா மற்றும் நேபாள நாடுகளுக்கிடையேயான கூட்டு இராணுவப்பயிற்சி
3. பாலஸ்தீனத்தின் ரமல்லா நகரில் தொழில்நுட்பபூங்கா அமைப்பதற்காக இந்தியா (ம) பாலஸ்தீனா நாடுகளுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது
4. சமீபத்தில் ஐரோப்பிய யூனியனுடன் ஒட்டுமொத்த பொருளாதார (ம) வணிக ஒப்பந்தம் (CECA- Comprehensive Economic and Cooperation Agreement) செய்துள்ள நாடு – கனடா
5. **சம்பிரிதி** – நவம்பர் 5 – 18 வரை **இந்திய வங்காளதேச** நாடுகளுக்கிடையேயான **கூட்டு இராணுவப் பயிற்சி, பங்கபந்து செனானிபஸ்** என்னும் காட்டுப் பகுதியிலுள்ள **தங்கைல்** என்னும் இடத்தில் நடைப்பெற்றது.
7. **சவுர் சுஜாலா யோஜனா** எனப்படும் விவசாயிகளுக்கு சூரிய ஒளியில் இயங்கும் பம்பு செட்கள் வழங்கும் திட்டத்தை பிரதமர் சட்டிஷ்கார் மாநிலத்தில் துவக்கி வைத்துள்ளார்
8. இந்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவிடங்களின் மெய்நிகர் சுற்றுலா (Virtual tour) உருவாக்குவதற்காக இந்திய தொல்லியல் ஆராய்ச்சி நிறுவனமும் கூகுள் நிறுவனமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன.
9. கூட்டு மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப மையம் அமைப்பதற்காக இராணுவ ஆராய்ச்சி நிறுவனமான DRDO (Defence Research and Development Organisation) டெல்லி ஐஐடி யுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது
10. Tri - Netra - இரயில் பயண விபத்துகளை குறைப்பதற்காக இந்திய ரயில்வேயினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய செயல்திட்டம்.
11. பிரதான் மந்திரி சுரக்சித் மத்ரித்வா அபியான் எனப்படும் திட்டம் கற்பிணி பெண்களுக்கான இலவச மருத்துவ சோதனை வழங்குவதற்கு இத்திட்டம் ஜீன் 9 2016 அன்று பிரதமரால் தொடங்கப்பட்டது
12. Smart India Hackathon – தேசிய அளவிலான மாணவர்களுக்கான டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்கான முயற்சி புதுடில்லியில தெடாங்கப்பட்டது,
13. பிரதம் மந்திரி யுவ யோஜனா – இளைஞர்களுக்கு தொழில் முனைவுக்கான கல்வி மற்றும் பயிற்சியளிக்கும் திட்டத்தை மத்திய திறன் மேம்பாட்டு அமைச்சர் ராஜீவ் பிரதாப் ருடி துவக்கிவைத்தார்,
14. மகாராஷ்டிர மாநிலம் கனடா நாட்டுடன் தனது மாநிலத்திலுள்ள நகர்ப்புற உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவற்காக ஒப்நதம் செய்துள்ளது
15. லக்ஷிய பாகிரதி திட்டம் – சட்டிஸ்கார் மாநிலத்தினால் அறிவிக்கப்பட்ட இத்திட்டம் நிலுவையிலுள்ள 108 நீர்ப்பாசன திட்டங்களை விரைந்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
16." Hand in Hand 2016" - இந்திய ராணுவமும் சீன மக்கள் குடியரசின் ராணுவமும் பங்கேற்கும் 6–வது கூட்டு ராணுவப் பயிற்சி
17. நீர் வள மேலாண்மை மற்றும் விவசாயம் தொடர்பான இரு ஒப்பந்தங்களை இந்தியா – இஸ்ரேல் நாடுகள் செய்துள்ளன

18. இரவு தங்குமிடம் வசிதிகைள கண்காணிப்பதற்காக உச்சநீதிமன்றத்தால் அமைக்கப்பட்டுள்ள குழு – கைலாஷ் காம்பீர் குரு

19. ரஸ்ம் 2 "TAPAS 201" – மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் தயாரிக்கப்பட்ட நீண்ட தூரம் சென்று அதிக சக்தி வாய்ந்து தாக்கும் திறன் கொண்ட ஆளில்லாவிமானம் .

20. 500 (ம) 1000 ரூபாய் நோட்டுக்களைத் திரும்பப் பெறும்திட்டம் அறிவிக்கப்பட்ட பின்னர் ஏடிஎம் இயந்திரங்களை மறுசீரமைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள குழுவின் தலைவர் – எஸ் எஸ் முந்த்ரா

21. ஹர்கர் பிஜிலி லகாதார் – எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள மாநிலம் – பீகார் வறுமைக் கோட்டிற்கு மேலுள்ள 50 லட்சம் வீடுகளுக்கு இலவச மின்சார இணைப்பு வழங்கும் அனைத்து வீடுகளுக்கும் தடையற்ற மின்சாரம்

22. பிரதம மந்திரி கிராமீன் அவாஸ் யோஜனா – 2022 ஆம் ஆண்டிற்குள் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள அனைத்து மக்களுக்கும் குறைந்த செலவில் வீட்டு வசதி ஏற்படுத்துவதற்கான திட்டம்

23. அன்னபூர்ணா ராசோய் திட்டம் – ராஜஸ்தான் மாநிலத்தில் குறைந்த விலையில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம்

24. பல்கலைக்கழகங்களில் யோகா கல்வியை அறிமுகம் செய்தவற்காக மத்திய அரசு அமைத்த குழு – எச் ஆர். நாகேந்திரா குழு

## நியமனங்கள்

1. மத்திய நேரடி வரிகள் வாரிய தலைவராக **சுஷீல் சந்திரா** பொறுப்பேற்றார்.

2. கனடாவில் முதல் சீக்கிய மதத்தைச் சார்ந்த செனட் உறுப்பினராக **சரப்ஜித் சிங்** மார்வா நியமிக்கப்பட்ட உள்ளார்

3. **கிம் பியோங் ஜோன்** (kim Byong Jhon) தென் கொரியாவின் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்

4. இரயில்வே அமைச்சகத்தினால் துய்மை இரயில்கள் திட்டத்தின் விளம்பர தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார் – **பிந்தேஷ்வர் பாதக்**

5. ஐ. நா. வின் சட்ட வல்லுநராக இந்திய இளம் வழக்குரைஞர் **அனிருத்தா ராஜ்புத்** தேர்வு செய்யப்பட்டுள்ளார்

6. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த **டாக்டர் சீமா வர்மா** அமெரிக்க அரசின் சுகாதாரத் துறையின் கீழ்வரும் மருத்துவச் சேவைகள் அமைப்பின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்

7. **ஆஸ்திரேலிய உச்ச நீதிமன்றத்துக்கு முதல் பெண்** தலைமை நீதிபதியாக **சூசன் கீஃபெல்** நியமிக்கப்பட்டுள்ளார்

8. மத்திய ரிசர்வ் வங்கியின் செயல் இயக்குநராக **எம். ராஜேஷ்வர் ராய்** நியமிக்கப்பட்டுள்ளார்.

9. **சுவிட்சர்லாந்து நாட்டின் சுற்றுலாவிற்கான விளம்பர தூதுவராக** நியமிக்கப்பட்டுள்ள இந்திய நடிகர் – **ரன்வீர் சிங்**

10. பார்வையற்றோருக்கான டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான தூதராக இந்திய அணி முன்னாள் வீரர் **ராகுல் டிராவிட்** நியமிக்கப்பட்டுள்ளார்

11. அமெரிக்க அதிபர் தேர்லில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த **டொனால்டு டிரம்ப்** வெற்றி பெற்றார். இவர் 45–வது அதிபராக பொறுப்பேற்க உள்ளார்

12. டிசிஎஸ் நிறுவனத்தின் சேர்மேனாக **இஷாத் ஹீசைன்** நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

13. அமெரிக்காவின் செனட் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பபட்டுள்ள முதல் இந்தியர் – **கமலா ஹாரிஸ்**

14. அமெரிக்காவின் பிரதிநிதித்துவ சபைக்கு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ள முதல் இந்திய அமெரிக்க பெண் – **பிரமிளா ஜெயபால்.**

15. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் புதிய இயக்குநர் ஜெனராக இரண்டாவது முறையாக தொடர்ந்து நியமிக்கப்பட்டுள்ளவர் – **ஹை ரைடர்**

16. இண்டர்போல் என்ற அமைப்பின் புதிய தலைவராக **சீனாவின் மெங் ஹாங்வெய்** நியமிக்கப்பட்டுள்ளார்

17. செபி அமைப்பின் முழு நேர உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் – **குருமூர்த்தி** மகாலிங்கம்

18. தாய்லாந்தின் புதிய மன்னராக **மஹா வஜ்ஜிரலோங்கோர்ன்** பதவியேற்றார்

19. சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் தலைவராக ஹாக்கி இந்தியா தலைவர் **நரீந்தர் பத்ரா** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

20. **ஐ. நா. ஆமைப்பின் நல்லெண்ண தூதுவராக** நியமிக்கப்பட்டடுள்ள டென்னிஸ் வீராங்கனை– **மரிய செரபோவா**

21. அமெரிக்காவுக்கான புதிய இந்தியத் தூதராக **நவ்தேஜ் சர்னா** பொறுப்பேற்றுக் கொண்டார்.

22. செபி அமைப்பின் தலைவர் – **உபேந்திர குமார்சின்கா**

23. ஐ. நா. வுக்கான அமெரிக்க தூதராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த **நிக்கி ஹேலி** தேர்வு செய்யப்பட்டுள்ளார்

24. இந்தியா வணிக நிறுவனங்களின் கூட்டமைப்பின் 2017 ஆம் ஆண்டிற்கான தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் **பங்கஜ் பட்டேல்**

25. பாகிஸ்தான் ராணுவத்தின் அடுத்த தலைமை தளபதியாக **கமர் ஜாவேத் பாஜ்வா** நியமிக்கப்பட்டார்.

26. ஹாக்கி இந்திய அமைப்பின் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டவர் – **மாரியம்மா கோஷி**

27. சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் தலைவராக ஐரோப்பியர் அல்லாத முதல் நபராக **நரேந்தர் துருவ் பத்ரா** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
28. தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் தலைவராக **யூத்வீர் சிங் மாலிக்** நியமிக்கப்பட்டுள்ளார்.
29. அரசு (ம) பொதுமக்களுக்கிடையே 100% பணப்பரிமற்றங்களை டிஜிட்டல் மயமாக்குவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் – **அமிதாப் காந்த்**
30. IACC – Indo American chamber of commerce எனும் அமைப்பின் தலைவர் – **N.Y . சீனிவாசன்** தேர்ந்தெடுப்பட்டுள்ளார்.
31. முசௌரியில் அமைந்துள்ள லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாக பயிற்சி நிறுவனத்தின் இயக்குநராக **உப்மா சவுத்ரி** நியமிக்கப்பட்டுள்ளார்.

## விருதுகள்

1. 41–வது சர்வதேச திரைப்பட விழாவில் **சிறந்த திரைக்கலைஞர் விருது எஸ். பி. பாலசுப்ரமணியத்திற்கு** வழங்கப்பட உள்ளது
2. ICFI (International council for film television and audio visual) - UNESCO Gandhi medal விருது பெற்ற திரைப்படம் – **cold of kalandar**
3. இந்திய பத்திரிக்கையாளர்களுள் சிறந்த பத்திரிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் **ராஜா ராம் மோகன்ராய் விருது 2016 எஸ். நிகில் சிங்** என்பவருக்கு வழங்கப்படவுள்ளது. இவ்வமைப்பினால் வழங்கப்படும் **ஊரப்புற ஊடகவியல் மற்றும் வளர்ச்சிக்கான பத்திரிக்கை எழுத்திற்கான விருது ரஞ்சித் ஜோன்க்** என்பவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
4. சமீபத்தில் பிரதமர் நரேத்திர மோடி அவர்களால் வழங்கப்பட்ட **ராம்நாத் கோயங்கா விருதுகள் தொடர்புடைய துறை – பத்திரிக்கைத்துறை**
5. **ஜப்பானின் டோக்கியோ** நகரில் நடைபெற்ற சர்வதேச அழகிப் போட்டி 2016–ல் பிலிப்பைன்ஸ் நாட்டின் **கைலீ வெரோஷா சர்வதேச அழகி பட்டம்** வென்றார்.
6. துபாய் சர்வதேச திரைப்பட விழாவில் **வாழ்நாள் சாதனையாளர் விருது** வழங்கப்படவுள்ள இந்திய நடிகை – **ரேகா**
7. தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் **எஸ். திலகருக்கு** தேசிய கால்நடை மருத்துவ அறிவியல் அகாதெமின் சார்பில் கால்நடை மருத்துவ அறிவியலுக்கான **தேசிய அகாதெமி உறுப்பினர் அந்தஸ்து** வழங்கப்பட்டுள்ளது
8. **Dr- APJ Abdulkalam IGNITE Awards 2016** - மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறையின் அங்கமான தேசிய புதுமைத்துவ அமைப்பினால் வழங்கப்படுகிறது (National Innovative Foundation)

9. **எல்லைகளற்ற பத்திரிக்கையாளர் விருது 2016** பெற்றவர்– **ஹாதி அப்துல்லா** (Hadi Abdullah)

10. **டாடா வாழ்நாள் சாதனையாளருக்கான இலக்கிய விருது** 2016 இந்திய அமெரிக்கரான **அமிதாவ் கோஷ்** என்பவருக்கு வழங்கப்படுகிறது

11. 2016–ம் ஆண்டிற்காண **நிறுவன மேலாண்மைக்கான தங்க மயில் விருது** (Golden peacock Award for corporate governance ) பெற்றுள்ள இந்தியப் பொதுத்துறை நிறுவனம் – **ஸ்டீல் அதாரிட்டி ஆஃப் இந்தியா லிமிடெட் (SAIL)**

12. குழந்தைகள் தினத்தன்று தமிழகம் சார்ந்த 3 சிறார்கள் உட்பட 31 குழந்தைகளுக்கு குடியரசுத் தலைவர் பரிசு வழங்கினார் .

13. **உலக குடிமகன் விருது 2016** பெற்றுள்ள இந்திய ஆப்பிரிக்கரான நபர் – **இம்தியாஸ் சோலிமான்**

14. **10– வது ஆசிய பசிபிக் திரைப்பட விருதுகள்** வழங்கும் நிகழ்ச்சியில் இந்தியாவின் **மனோஜ் வாஜ்பேயி** சிறந்த நடிகருக்கான விருதைப் பெற்றுள்ளார்.

15. 2016–ம் ஆண்டிற்கான **கௌரவ அகாதெமி விருது** பெற்றுள்ளவர் – **ஜாக்கி ஜான்**

16. **பார்ச்சூன் பத்திரிக்கையினால் 2016** ஆம் ஆண்டிற்கான **சிறந்த தொழிலதிபராக** தேர்வு செய்யப்பட்டுள்ளவர் **மார்க் சுக்கர் பர்க்**

17. பத்திரிக்கைத் துறையில் சிறப்பான சேவைக்காக 2016 ஆம் ஆண்டிற்கான **ராஜா ராம் மோகன் ராய் விருது பெற்றவர் டி. பி. தனேஷ்.**

18. அமெரிக்க வேளாண்துறை ஆராய்ச்சி கழகத்தில் விஞ்ஞானியாக பணிபுரிந்து வரும் கன்னியாகுமரி மாவட்டம் சார்ந்த **செல்லப்பன் பத்மநாபன் நோயில்லாத தாவரங்களை உருவாக்கியது** குறித்த ஆரயாச்சியில் பணிபுரிந்ததற்காக **அமெரிக்க தேசிய விருது வழங்கப்பட்டது**

19. எஸ். பி. பாலசுப்ரமணியத்துக்கு கோவாவில் துவங்கிய **47–வது ஐ. எப். எப். ஐ** எனப்படும் இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் **நூறாண்டு சாதனை விருது** வழங்கப்பட்டது.

20. சமூக நீதிக்கான **மதர் தெரசா நினைவு சர்வ தேச விருது 2016–ஃபாராஸ் ஆயாஸ் ஹீஸைன்** என்பவருக்கு வழங்கப்பட்டது.

21. **இன்ஃபோசிஸ் மனிதாபிமானத்திற்கான விருது** 2016 பெற்றவர் **சுனித் அம்ரித்**

22. முதலாவது உலக சமஸ்கிருத விருது பெற்றவர் – **தாய்லாந்து இளவரசி மஹா சக்ரி சிரிந்தோர்ன்**

23. சத்தீஸ்கர் மாநிலத்தில் வசிக்கும் செய்தியாளர் **மாலினி சுப்ரமணியம் பத்திரிக்கை சுதந்திரத்துக்கான சர்வதேச விருதுக்குத்** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

24. ஐ. நா அமைப்பின் சர்வதேச தொலை தொடர்பு ஒன்றியத்தினால் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள **காவல் சமுதாய அறிக்கை 2016**–ல் **இந்தியா 138–வது இடம்** பெற்றுள்ளது.

25. **சர்வதேச மல்யுத்த அமைப்பு** இந்தியாவின் மேரி கொம்க்கு **legends award** எனும் விருதை வழங்கி சிறப்பித்துள்ளது.

## புத்தகங்கள்

1. **Immortal** எனும் புத்தகத்தின் ஆசிரியர் – **கிருஷ்ணா உதயசங்கர்**
2. **"Harp"** எனும் புத்தகத்தின் ஆசிரியர் – **நதீ பால்மியா**
3. **The singularity is Near : When Humans Transcend Biology** என்ற புத்தகத்தின் ஆசிரியர் – **ரே நிர்ஷ்வெயில்**
4. **Game goes on** எனும் புத்தகத்தின் ஆசிரியர் – **ஆலன் மேக் கில்வரே** (ஆஸ்திரேலிய கிரிக்கட் வர்ணணையாளர்)
5. **"An Era of Darkness : the British Empire in India"** எனும் புத்தகத்தின் ஆசிரியர் – **சரி தரூர்**
6. **"Beyond the last blue mountain : A life of J.R.D Tata"** எனும் புத்தகத்தின் ஆசிரியர் – **R.M. லாலா**
7. Conflicts of Interest: My journey through India's green movement - **சுனிதா நரைன்**
8. "The burning forest: India's war in Bastar" எனம் புத்தகத்தின் ஆசிரியர் – **நந்தினி சுந்தர்**
9. " A session of ghosts" எனும் புத்தகத்தின் ஆசிரியர் – **ருஸ்கின் பாண்ட்**
10. "The legend of laskhmi prasad - **டிவிங்கிள் கன்னா**
11. Heyday : Britain and the birth of the modern world' - **பெண் வில்சன்**
12. "Water for Elephants" - **சாரா குருயன்**
13. Gita press and the making of Hindu India - **அக்சயா முகுல்**
14. "The Ivory throne : Chronicles of the Houses of Travancone - **மனு எஸ். பிள்ளை**
15. "Death under the Deodars" – **ரஷ்கின் பாண்ட்**
16. "Midnight's furies: The deadly legacy of India's partition" - **நிசித் ஹ ஜாரி**
17. Swimmer among the stars - **கனிஷ்க் தரூர்**

## விளையாட்டு

1. மெக்ஸிகோ கிராண்ட்ப்ரீ ஃபார்முலா 1 கார் பந்தயத்தில் **மெர்ஸிடஸ் டிரைவர் லீவிஸ் ஹாமில்டன் முதலிடத்தைப்** பிடித்துள்ளார்.
2. இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் கேப்டன் – **ஜீலன் கோஸ்வாமி**

3. சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய மகளிர் சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி இறுதிப் போட்டியில் சீனாவை வீழ்த்தி இந்திய மகளிர் அணி வெற்றி பெற்றது.
4. மலேசியாவில் நடைபெற்ற **2016 ஆம் ஆண்டிற்கான ஆடவர் ஆசிய ஹாக்கி சாம்பியன்** போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி **இந்தியா சாம்பியன் பட்டத்தை** வென்றுள்ளது
5. ஆசியன் சாம்பியன் டிராபி ஹாக்கி போட்டி **2016–ல் இந்தியாவில் பெண்கள் அணி சீனாவை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது**
6. இங்கிலாந்தின் பர்மிங்காம் நகரில் நடைபெற்ற ஏழாவது உலக **கேரம்** சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் ஸ்ரீலங்காவை வீழ்த்தி **இந்திய பெண்கள் அணி சாம்பியன் பட்டம் வென்றது**
7. 2016 பாரீஸ் மாஸ்டர் டைட்டில் டென்னிஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றவர் – **ஆண்டிமுர்ரே**
8. பிரேசில் பார்முலா ஒன் கிராண்ட் பிரிக்ஸ் 2016–ல் வெற்றி பெற்றுள்ள கார் பந்தய வீரர் – **லேவிஸ் ஹேமில்டன்.**
9. குர்கானில் நடைபெற்ற மகளிர் ஓபன் கோல்ஃப் போட்டியில் இந்தியாவின் **அதிதி அசோக் சாம்பியன் பட்டம்** வென்றார் ஐரோப்பிய கோல்ஃப் தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற முதல் இந்தியர் ஆவார்
10. அமெரிக்காவின் செயிண்ட் லூயிஸ் நகரில் நடைபெற்ற சாம்பியன்ஸ் ஷோடவுண் 2016 செஸ் போட்டியில் இந்தியாவின் **விஸ்வநாதன் ஆனந்த் சாம்பியன்** பட்டம் வென்றார்.
11. 60–வது தேசிய **துப்பாக்கிச் சுடுதல்** போட்டியில் முன்னாள் உலக சாம்பியனான **மானவ்ஜித் சிங் சாந்து தங்கம்** வென்றார்
12. ஏடிபி உலக டூர் பைனல்ஸ் (ஆடவர் உலக டென்னிஸ் சாம்பியனஷிப் போட்டியின் இறுதிச்சுற்றில் ) ஆண்டி முர்ரே ஜோகோவிச்சை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றார்.
13. சீனாவின் புஜௌ நகரில் நடைபெற்ற சீன ஓபன் சூப்பர் சீரிஸ் பாட்மிண்டன் போட்டியில் இந்தியாவில் **பி. வி. சிந்து சாம்பியன்** பட்டம் வென்றார்.
14. சீன ஒபன் பேட்மிண்டன் போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் வெற்றி பெற்றவர் – **ஜான் ஓ ஜோர் கென்சன்.**
15. ஹாங்காங் பேட்மிண்டன் ஓபன் சூப்பர் சீரிஸ் போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சீனாவில் தாய் சூயிங் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நா கா லாங் ஆங்கஸ் வெற்றி பெற்றுள்ளார்.
16. டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் அர்ஜென்டினா அணி வெற்றிபெற்றது
17. ஃபார்முலா 1 கார் பந்தயத்தில் மெர்ஸிடஸ் டிரைவர் நிகோ ரோஸ் பெர்க் சாம்பியன் பட்டம் வென்றார்.
18. AIBA இளைஞர்களக்கான உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் **சச்சின் சிங் தங்கம்** வென்றார்

19. இந்த ஆண்டின் சிறந்த குத்துச்சண்டை வீரர் விருதுக்கு இந்தியாவின் விகாஸ் கிருஷ்ணன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
20. பஹ்ரைன் சர்வதேச பேட்மண்டன் சாம்பியன் பட்டத்தை இந்திய பேட்மிண்டன் வீரர் பிரதுல் ஜோசி வென்றுள்ளார்.
21. ஹர்ஷவர்தினி – சென்னையைச் சேர்ந்த டேபிள் டென்னிஸ் வீராங்கனை மத்திய அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் தங்கம் வென்றார்.
22. ரஷிதா ரவி – சென்னையை சார்ந்த இவர் சதுரங்கப் போட்டியில் சிறந்து விளங்கியதற்காக இவ்விருது கிடைத்தது
23. சிவசூர்யா தூத்துக்குடியை சார்ந்த இவருக்கு சிறந்த கண்டுபிடிப்புகளை உருவாக்கியதற்காக விருது கிடைத்தது.
24. 43–வது தேசிய பெண்கள் பிரீமியர் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் 2016–ல் வெற்றி பெற்றவர் – பத்மினி ருட்